**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>MCOP - 12/2019</u>**

**<u>நாள் – 13.11.2025</u>**

**<u>PW – 1</u>** சுகந்தி

**க/பெ.** முத்துராஜ்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of November 2025)**

**(மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் பட்டியலில் கண்ட வரிசை எண்.5–ல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.60,000/– என்பது சிகிச்சைக்குரிய உத்தேச தொகையாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதேபோல், வரிசை எண்.7,8 மருத்துவ பில்களில் கண்ட ரூ.30,000/–, ரூ.2,000/– ஆக மொத்தம் ரூ.32,000/– ஆனது சிகிச்சையின் போது வைப்பீடு செய்யப்பட்ட தொகை என்றும், அந்த தொகை ரூ.32,000/– ஆனது வரிசை எண்.24 மருத்துவ பில்லில் கழிக்கப்பட்டு மீதி தொகையான ரூ.28,857/– மட்டும் தான் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். மருத்துவ பில் பட்டியலில் கண்ட வரிசை எண்.19–ல் சொல்லப்பட்டுள்ள ரூ.140/–க்கு மருத்துவ பில் எதுவும் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ரூ.28,857/–ஐ வரிசை எண்.23–ல் கூடுதலாக மருத்துவ பில் பட்டியலில் சேர்த்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். வரிசை எண்.5,6,23 ஆகியவைகள் உள்ளடக்கம்

தான் வரிசை எண்.24–ல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.60,857/–என்றால் சரிதான். அதனால், மொத்த மருத்துவ பில்களாக ரூ.81,960/–க்கு தாக்கல் செய்துள்ளோம் என்றும், ஆனால், அதிகபட்சமாக ரூ.2,02,957/–என்று அதிகப்படுத்தி சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த விபத்தானது என்னுடைய கவனக்குறைவால் தான் நடந்தது என்றால் சரியல்ல. அதனால், நான் கேட்டுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனக்கு இடது கால் முட்டியில் ஏற்பட்ட காயத்திற்கு திருப்பூர் மருத்துவ குழுவிற்கு சென்று பரிசோதனை செய்து கொண்டேன். அந்த மருத்துவக்குழு வழங்கிய ஊனச்சான்று அசல் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. அந்த ஊனச்சான்றில் 20% என்று மிகைப்படுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சரியான பாதையில் நடந்து சென்றிருந்தால் விபத்து நடந்திருக்காது என்றும், நான் தான் எதிர்திசையில் சென்று விபத்தை வலிய ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் 3–ம் எதிரமனுதாரரான காப்பீட்டு நிறுவனம் எனக்கு எந்தவொரு இழப்பீடும் கொடுக்க கடமைப்பபட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.13 14:58:57 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**